



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.3.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்த "நம்ப கொளத்தூர் ! நம்ம முதல்வர்!!" என்ற சாதனை புத்தகத்தை வெளியிட, எவர்வின் பள்ளிக் குழுமத்தின் தாளாளர் புருஷோத்தமன் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெரம்பூர் செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் சகோதரி வனிதா, பெரம்பூர் லூர்து தேவாலயத்தின் பங்குதந்தை முனைவர் ஸ்டானிஸ்லாஸ் சுவாமிக்கண்ணும் எம்.எச். சலீம் அகமது ஃபாரூக்கி மற்றும் ஏ.பர்சானா ஆகியோரும் உடனிருந்தனர்.

### தி.மு.க. தலைமையிலான

## மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு உருது மக்கள் கட்சி ஆதரவு!



முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் "உருது மக்கள் கட்சி தலைவர் டாக்டர் உபைதுல்லா பைக் மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெற விருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு உருது மக்கள் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், தமிழக சட்டமன்றத்தின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு உருது மக்கள் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தி.மு.க. தலைமையிலான

## மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்திய சமூக நீதி இயக்கம் ஆதரவு!



முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் "இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் கதிரொளி மாணிக்கம் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்திய சமூகநீதி இயக்கக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், தமிழக சட்டமன்றத்தின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு இந்திய சமூகநீதி இயக்க நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### தி.மு.க. தேர்தல் அறிக்கையில்

## பத்திரிகையாளர் கோரிக்கையை ஏற்று அறிவித்த முதல்வருக்கு நன்றி!

### தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் அறிக்கை!

சென்னை,மார்ச்.31-

பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள் நலன் கருதி தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் சார்பில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் நமது யூனியன் நிர்வாகிகள் அளித்த கோரிக்கைகளான

மருத்துவ சிகிச்சைக்கான தொகை உயர்த்தி வழங்கப்படும் பத்திரிகையாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைகள் அனைத்தும் இருமடங்காக்கப்படும்

அரசு வாடகை குடியிருப்பில் 3 விழுக்காடு பத்திரிகையாளர்களுக்கு இடஒதுக்கீடு உறுதிசெய்யப்படும் ஒய்வூதியம் மருத்துவ உதவி போன்ற திட்டங்கள் காட்சி ஊடகத்தில் பணியாற்றும் பத்திரிக்கையாளர்களுக்கும் விரிவுபடுத்த ப்படும் உள்ளிட்ட

கோரிக்கைகளை தேர்தல் அறிக்கையில் இடம் பெறச் செய்த முதலமைச்சர் அவர்களுக்கும் தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவரும் திமுக துணை பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்ட தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினருக்கு தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியனின் நன்றியை தெரிவித்து கொள்வதோடு பத்திரிகை ஊடகவியலாளர்கள் நலன் கருதி அளிக்கபட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி பத்திரிகை ஊடகவியலாளர்களின் நலன் பேண வேண்டும் என்று தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் கேட்டுக்கொள்கிறது.

### தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

## இந்தியக் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் ஆதரவு!



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் "இந்தியக் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன், Ex.M.L.A அவர்கள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்தியக் குடியரசுக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், தமிழக சட்டமன்றத்தின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு இந்தியக் குடியரசுக் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.






சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு. வி.க. நகர் வடக்கு பகுதி தேர்தல் பணிமனையை அமைச்சர் – மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ப. தாயகம் கவி பகுதிக் கழகச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் கழக வேட்பாளர் கே எஸ் ரவிச்சந்திரன். பெரம்பூர் ஆர் ராஜன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

### தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில்

## திருவல்லிக்கேணி பகுதியில் தேர்தல் பணிமனைகளை நே.சிற்றரசு திறந்து வைக்கிறார்!

### பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. அறிக்கை!

*சென்னை, மார்ச். 31 -* மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதியில் தேர்தல் பணிமனை திறப்பு விழா மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நடேசன் சாலையில் அமைந்துள்ள திருவல்லிக்கேணி பகுதிக் கழக தேர்தல் பணிமனை மற்றும் வட்டக் கழக தேர்தல் பணிமனைகளை இன்று (31.03.2026 - செவ்வாய்கிழமை) காலை 10.00 மணியளவில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலையில், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு திறந்து வைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து வட்டக் கழக தேர்தல் பணிமனை திறப்பு நிகழ்ச்சிகள் 115 (அ) வட்டம், எச்.எம்.ஏ.தெருவில் கே.ஜி.செந்தில்குமார் தலைமையிலும், 116 வது வட்டம், பழண்டி அம்மன் கோயில் தெருவில் எஸ்.சசிகுமார் தலைமையிலும், 116 (அ) வட்டம், சுந்தரமூர்த்தி கோயில் தெருவில் ஜெ.விஜயகுமார் தலைமையிலும், 119 வது வட்டம், பூரம் பிரகாசம் சாலையில் க.வே.மோகன் தலைமையிலும், 119 (அ) வட்டம், வி.எம்.தெருவில் லைனர் கே.பிரபு தலைமையிலும், 120 வது வட்டம், நடேசன் தெருவில் ஐ.சி. எப்.எம்.சங்கர் தலைமையிலும், 120 (அ) வட்டம், கந்தப்பா தெருவில் என்.ரவி தலைமையில் பணிமனை திறப்பு விழா மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் வீ.பி.பொன்னரசு, ஆர்.என்.துரை, ஆர்.சுபேர் கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், இ.இளம்பாரதி, வே.கமலா செழியன், ரவி.ராஜ்குமார், எம்.கே.ஆனந்த், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தினகரன், ரா.பத்மாவதி, எம். பிரேம்ராஜா, எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க.வே. மோகன், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ். சசிக்குமார், எம்.கலில்ரகுமான், ஆர்.சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், எஸ்.விஜயக்குமார், ஏ.பி.வேலு, ஆர்.ராஜ்குமார், வி.தினேஷ்குமார், மங்கை ராஜ்குமார் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கோட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிட மீண்டும் தேர்வு செய்யப்பட்ட சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.வை மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, வட்டப் பொறுப்பாளர் மா.பா. அன்பு ஆகியோர் முன்னிலையில் மாவட்ட பிரதிநிதி மயிலை தென்றல் விஜய் தலைமையில் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து வாழ்த்தினர். உடன் சாஸ்தா எஸ்.குமார், ஸ்டார் குமார், காசி, பஞ்சர் முருகன், மனோகர், கார்த்திக், வைதி, இ.உதயா, அஜித், நந்தா, முரளி, ஹரிஷ், லாக் நரசிம்மன், தினேஷ், பிரகாஷ், நந்தா, இளங்கோ, லாக் மூர்த்தி, பட்டினம் பாக்கம் வீரமணி, காசி, தட்சிணாமூர்த்தி, ஆர்.விஜயகுமார், எஸ்.கௌதம் மணி, என்.செல்வம், யு.சுரேஷ் உள்ளிட்டார் பங்கேற்றனர்.